ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை

+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304

communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව

இலங்கை மத்திய வங்கி

CENTRAL BANK OF SRI LANKA



வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

திகதி 2024 சனவரி 31


# வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம் - 2023 திசெம்பர்

## முக்கிய பண்புகள்

- ஏற்றுமதி வருவாய்களுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட ஒப்பீட்டளவிலான பாரிய சுருக்கத்தினால் ஆதரவளிக்கப்பட்டு 2023இற்கான வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது 2010இலிருந்தான மிகவும் தாழ்ந்தளவிலான மட்டத்தினைப் பதிவுசெய்தது.
- வர்த்தகப் பற்றாக்குறையானது 2022 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் விரிவடைந்தது. இருப்பினும், இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் அண்மைக்காலத் தளர்த்தல்களுக்கு மத்தியில் இறக்குமதிகள் தொடர்ந்தும் மிதமடைந்துக் காணப்பட்டன.
- தொழிலாளர் பணவனுப்பல்கள் 2023இல் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 6 பில்லியன் தொகை ஆரோக்கியமான மட்டமொன்றைப் பதிவுசெய்ததுடன் 2021 ஏப்பிறலிலிருந்தான உயர்ந்தளவிலான மாதாந்தப் பெறுமதியை 2023 திசெம்பரில் பதிவுசெய்தது.
- 2023ஆம் ஆண்டிற்கான சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்கவொரு மீட்சியின் விளைவாக ஐ.அ.டொலர் 2 பில்லியன் தொகையினை விஞ்சிக் காணப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளன.
- அரச பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் 2023இல் தேறிய உட்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தன.
- மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2023 திசெம்பர் இறுதியளவில் ஐ.அ.டொலர் 4.4 பில்லியனிற்கு குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டதுடன் இலங்கை ரூபாவானது 2023 ஆண்டு காலப்பகுதியில் 12.1 சதவீத உயர்வொன்றினைப் பதிவுசெய்தது.

## வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம்

### ஏற்றுமதிகள்







| வர்த்தக மீதி (ஐ.அ.டொ.பில்) | திசெ | சன-திசெ |
|---|---|---|
| 2022 | 0.36 | 5.2 |
| 2023 | 0.49 | 4.9 |

### இறக்குமதிகள்




### சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள்




### தொழிலாளர் பணவனுப்பல்கள்




### மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்*




* சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கியுள்ளது

### கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் தேறிய உட்பாய்ச்சல்கள் (முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் - தேறிய)




### அரச பிணையங்கள் சந்தையிற்கான மொத்த உட்பாய்ச்சல்கள்




### வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள் (ஐ.அ.டொ/ரூ)



## 2023இல் வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம்

**வர்த்தகக் கணக்கின் ஒன்றுசேர்ந்த பற்றாக்குறையானது 2022இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 5,185 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 4,900 மில்லியனாக 2010இலிருந்தான தாழ்ந்தளவிலான மட்டமொன்றிற்கு 2023இல் சுருக்கமடைந்தது.** வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2022உடன் ஒப்பிடுகையில் 2023இல் ஐ.அ.டொலர் 11,911 மில்லியனிற்கு 9.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. ஆடைகளின் ஏற்றுமதி வீழ்ச்சியின் காரணமாக கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியானது 2023இல் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தது. அதேவேளை, அவசரமற்ற இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள், பொருளாதாரத்தின் தாழ்ந்தளவிலான நடவடிக்கைகள் மற்றும் இறுக்கமான நாணய நிலைமைகளின் காரணமாக பொதுமக்களின் தாழ்ந்தளவிலான செலவிடல் இயலளவு என்பனவற்றின் விளைவாக வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் 2023இல் ஐ.அ.டொலர் 16,811 மில்லியனாக விளங்கி, 8.1 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. வர்த்தக மீதியில் ஏற்பட்ட இம்மாற்றத்திற்குப் பங்களித்த முக்கிய காரணிகள் வரைபடம் 1இல் காட்டப்பட்டுள்ளன.

**வரைபடம் 1: 2023 காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையின் ஆண்டிற்காண்டு மாற்றத்திற்கு பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ. மில்)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் வர்த்தக மீதி

வணிகப்பொருள் வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையானது தாழ்ந்தளவிலான ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் உயர்ந்தளவிலான இறக்குமதிச் செலவினம் என்பவற்றின் இணைந்த தாக்கத்தின் காரணமாக 2022 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 358 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் ஐ.அ.டொலர் 487 மில்லியனிற்கு விரிவடைந்தது.

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்[1]

**வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2022 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,068 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் ஐ.அ.டொலர் 1,002 மில்லியனிற்கு 6.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** 2023 திசெம்பரில் கைத்தொழில் ஏற்றுமதிகள் மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகள் என்பவற்றின் வருவாய்களில் வீழ்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்டவேளையில் வேளாண்மை ஏற்றுமதிகளில் அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டது.

[1] இலங்கை மத்திய வங்கியின் ஏற்றுமதிகளின் வகைப்படுத்தல் மற்றும் நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையிலமைந்த ஏற்றுமதிகளின் வகைப்படுத்தல் என்பன முறையே இணைப்பு II மற்றும் இணைப்பு III இல் காட்டப்பட்டுள்ளன.

**கைத்தொழில் ஏற்றுமதிகள்:** அநேகமான முக்கிய சந்தைகளுக்கான (ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராச்சியம்) தாழ்ந்தளவிலான ஆடை ஏற்றுமதிகளின் காரணமாக கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2022 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் வீழ்ச்சியடைந்தன. இருப்பினும், ஆடை ஏற்றுமதிகள் 2023 நவெம்பருடன் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் குறிப்பிடத்தக்களவிலான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்திருந்தன. அதேவேளை, பெற்றோலிய உற்பத்திகள் (உயர்ந்த நீர்க்கல அளவுகளினால் உந்தப்பட்டு), உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை (முக்கியமாக, காய்கறிகள், பழங்கள் மற்றும் விதைத் தயாரிப்புக்கள்), இறப்பர் உற்பத்தி (முக்கியமாக, டயர்கள்) என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தபோதிலும் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், விலங்குத்தீன் (முக்கியமாக, கோழித் தீன் மற்றும் கோதுமை மீதிகள்) மற்றும் பொறி மற்றும் பொறியியல் சாதனங்கள் (முக்கியமாக, இலத்திரனியல் சாதனம்) என்பவற்றின் ஏற்றுமதிகளில் கணிசமானளவிலான வீழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்டன.

**வேளாண்மை ஏற்றுமதிகள்:** உயர்ந்தளவிலான ஏற்றுமதி அளவுகளின் விளைவாக தேயிலையிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய காரணமாக வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் மேம்பட்டுக் காணப்பட்டன. மேலும், கடலுணவு (முதன்மையாக, புதிய மீன்), பதப்படுத்தப்படாத புகையிலை மற்றும் காய்கறிகள் என்பவற்றின் உயர்ந்தளவிலான ஏற்றுமதி அளவுகளின் காரணமாக ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தன.

**கனிப்பொருள் ஏற்றுமதிகள்:** 2022 திசெம்பரில் தைட்டானிய தாதின் உயர்ந்தளவிலான ஏற்றுமதிகளின் தளத் தாக்கத்தின் முக்கிய காரணமாக கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2022 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தன.

**வரைபடம் 3: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 4: ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்[2]

**வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் 2022 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,426 மில்லியனுடனும் 2023 நவெம்பரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,389 மில்லியனுடனும் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் ஐ.அ.டொலர் 1,489 மில்லியனிற்கு அதிகரித்தன.** இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் தளர்வின் பகுதியளவிலான காரணத்தினால் முதலீட்டுப் பொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதிகளில் ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டது.

[2] இலங்கை மத்திய வங்கியின் இறக்குமதிகளின் வகைப்படுத்தல் மற்றும் நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையிலமைந்த இறக்குமதிகளின் வகைப்படுத்தல் என்பன முறையே இணைப்பு IV மற்றும் இணைப்பு V இல் காட்டப்பட்டுள்ளன.

**நுகர்வுப் பொருட்கள்:** உணவு மற்றும் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் ஆகிய இரண்டினதும் மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினால் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் அதிகரித்து காணப்பட்டது. உணவு மற்றும் குடிபானங்கள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது எண்ணெய் மற்றும் கொழுப்புக்கள் (முக்கியமாக, தேங்காய் எண்ணெய்), சீனி மற்றும் காய்கறிகள் (முக்கியமாக, வெங்காயம்) என்பவற்றினால் உந்தப்பட்ட அதேவேளையில் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் (முக்கியமாக, கைத்தொலைபேசிகள்), வீட்டுச்சாதனப் பொருட்கள் (முக்கியமாக, தொலைக்காட்சிகள்) மற்றும் வீட்டு மற்றும் தளபாடப் பொருட்கள் என்பவற்றினால் உந்தப்பட்டுக் காணப்பட்டது.

**இடைநிலைப் பொருட்கள்:** தாழ்ந்தளவிலான வளமாக்கி இறக்குமதிகளினால் (2022 திசெம்பரில் உயர்ந்தளவிலான யூரியா இறக்குமதிகளின் தளத் தாக்கத்தால்) முக்கியமாக உந்தப்பட்டு இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. மேலும், புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் (முதன்மையாக, துணி) மற்றும் சோளம் என்பவற்றின் இறக்குமதிகளில் கணிசமானளவிலான வீழ்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்டது. இருப்பினும், மசகெண்ணெய் மற்றும் நிலக்கரி என்பவற்றின் உயர்ந்தளவிலான இறக்குமதி அளவுகளின் காரணமாக எரிபொருள் இறக்குமதி மீதான செலவினம் அதிகரித்தவேளையில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, வைரங்கள் மற்றும் விலைமதிப்பற்ற அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் (முக்கியமாக, கைத்தொழில் வைரங்கள்), இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் (முக்கியமாக, ஆரம்ப வடிவத்திலான இறப்பர்), அடிப்படை உலோகங்கள் (முக்கியமாக, இரும்பு மற்றும் உருக்கு) மற்றும் இரசாயன உற்பத்திகளின் இறக்குமதிச் செலவினம் 2023 திசெம்பரில் அதிகரித்தது.

**முதலீட்டுப் பொருட்கள்:** பொறி மற்றும் சாதனங்களினால் (முதன்மையாக, கொதிகலன்கள்) உந்தப்பட்டு, முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2022 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் அதிகரித்தது. அதேவேளை, முறையே, வானூர்திகள் மற்றும் இரும்பு மற்றும் உருக்குப் பொருட்கள் என்பவற்றின் மீதான உயர்ந்தளவிலான இறக்குமதிச் செலவினத்தின் முக்கிய காரணமாக போக்குவரத்துச் சாதனங்கள் மற்றும் கட்டடவாக்கப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினங்களும் அதிகரித்து காணப்பட்டன.

**வரைபடம் 5: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றும்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 6: இறக்குமதிகளின் உள்ளடக்கம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: மாதாந்த எரிபொருள் மற்றும் எரிபொருள் அல்லா இறக்குமதிகளின் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் வர்த்தகச் சுட்டெண்கள்

**2023இல் செயலாற்றம்:** இறக்குமதி விலைகளுக்கு ஏற்றுமதி விலைகளின் விகிதமாக விளங்குகின்ற வர்த்தக மாற்று விகிதமானது 2022உடன் ஒப்பிடுகையில் 2023இல் 86.1 சுட்டெண் புள்ளிகளுக்கு 0.1 சதவீதத்தினால் சிறிதளவு தேய்வடைந்தது. 2022உடன் ஒப்பிடுகையில் 2023 காலப்பகுதியில், ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 1.9 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் ஏற்றுமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் 10.8 சதவீதத்தினால் குறைவடைந்து காணப்பட்டது. 2022உடன் ஒப்பிடுகையில் 2023 காலப்பகுதியில், இறக்குமதி அளவுச் சுட்டெண் 3.0 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளையில் இறக்குமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் 10.8 சதவீதத்தினால் குறைவடைந்து காணப்பட்டது.

**2023 திசெம்பரில் செயலாற்றம்:** வர்த்தக மாற்று விகிதமானது இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினை விஞ்சிக் காணப்பட்டமையினால் 2022 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் 6.3 சதவீதத்தினால் மேம்பட்டுக் காணப்பட்டது. ஏற்றுமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் முறையே 2.0 சதவீதத்தினாலும் 4.3 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமையானது 2023 திசெம்பரில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட குறைப்பிற்கு தாழ்ந்தளவிலான ஏற்றுமதி அளவுகள் மற்றும் விலைகள் ஆகிய இரண்டும் பங்களித்திருக்கக்கூடுமென்பதைச் சுட்டிக்காட்டியது. 2022 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் இறக்குமதி அளவுச் சுட்டெண் 16.0 சதவீதத்தினால் மேம்பட்டவேளையில், அலகுப் பெறுமதிச் சுட்டெண் 10.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையானது, 2023 திசெம்பரில் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது உயர்ந்தளவிலான இறக்குமதி அளவுகளால் உந்தப்பட்டமையினைச் சுட்டிக்காட்டியது.

**வரைபடம் 8: வர்த்தக மாற்று விகிதம்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 9: ஏற்றுமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 10: இறக்குமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய அபிவிருத்திகள்

**தொழிலாளர் பணவனுப்பல்கள்:** தொழிலாளர் பணவனுப்பல்கள் 2023 நவெம்பரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 537 மில்லியனுடனும் 2022 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 476 மில்லியனுடனும் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் ஐ.அ.டொலர் 570 மில்லியனாக விளங்கியது. இதன் விளைவாக, தொழிலாளர் பணவனுப்பல்கள் 2022இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3,789 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023இல் ஐ.அ.டொலர் 5,970 மில்லியனாக விளங்கி, 57.5 சதவீத ஆண்டிற்காண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்கான நாட்டிலிருந்தான புறப்படுகைகள் தொடர்பிலான தற்காலிகத் தரவுகளின் அடிப்படையில், 2022இல் பதிவுசெய்யப்பட்ட 311,056 எண்ணிக்கையிலான மொத்த புறப்படுகைகளுடன் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் மேற்கொள்ளப்பட்ட புறப்படுகைகள் மற்றும் 2023இல் மேற்கொள்ளப்பட்ட புறப்படுகைகள் முறையே 22,743 மற்றும் 297,656ஆக விளங்கின.

**சுற்றுலாப் பயணிகள்:** சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2023 நவெம்பரில் பதிவுசெய்யப்பட்ட 151,496 சுற்றுலாப் பயணிகளின் வருகைகளிலிருந்து 2023 திசெம்பரில் 210,352இற்கு அதிகரித்தன. ஒன்றுசேர்ந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2022இல் பதிவுசெய்யப்பட்ட 719,978 பயணிகளின் வருகைகளுடன் ஒப்பிடுகையில் 2023இல் குறிப்பிடத்தக்களவு மேம்பட்டு 1,487,303ஆக விளங்கி, 106.6 சதவீத ஆண்டிற்காண்டு வளர்ச்சியனைப் பதிவுசெய்தன. சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் முன்னைய மாதத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 205 மில்லியன் மற்றும் 2022 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 127 மில்லியன் கொண்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் ஐ.அ.டொலர் 269 மில்லியனாக மதிப்பிடப்பட்டன. இதன் விளைவாக, சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் 2022இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,136 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023இல் ஐ.அ.டொலர் 2,068 மில்லியனாக விளங்கி, 82.0 சதவீத ஆண்டிற்காண்டு வளர்ச்சியனைப் பதிவுசெய்தன. 2023இல் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முக்கிய மூல நாடுகளாக இந்தியா, ருசியா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் சீனா என்பன காணப்பட்டன.

**வரைபடம் 11: மாதாந்த சுற்றுலாப் பயணிகள் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 12: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான வருவாய்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
உரிமம்பெற்ற வங்கிகள்
இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

அரச பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் 2023 திசெம்பரில் ஐ.அ.டொலர் 23 மில்லியன் பெறுமதி கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்த போதிலும் 2023இல் ஐ.அ.டொலர் 210 மில்லியன் பெறுமதி கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்று பதிவுசெய்யப்பட்டது. அதேவேளை, முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2023இல் ஐ.அ.டொலர் 18 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.

## பன்னாட்டு ஒதுக்குகள்

மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2023 திசெம்பர் இறுதியளவில் ஐ.அ.டொலர் 4.4 பில்லியனிற்கு மேம்பட்டன. இது பயன்படுத்தக்கூடிய தன்மை தொடர்பிலான நிபந்தனைகளுக்குட்பட்ட ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.4 பில்லியனிற்கு நிகரான சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கியது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து மத்திய வங்கியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் கணிசமானளவிலான தேறிய கொள்வனவுகள் மற்றும் பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றிலிருந்தான பெறுகைகள் என்பன மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாயமைந்தன. ஒட்டுமொத்தமாக, 2023இல் தேறிய அடிப்படையொன்றில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.9 பில்லியன் தொகையை மத்திய வங்கி கொள்வனவு செய்துள்ளது. சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதி உள்ளடங்கலாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் இறக்குமதி உள்ளடக்கமானது மேம்பட்டு 2021 ஏப்பிறலிலிருந்து முதல் தடவையாக 2023 திசெம்பரளவில் 3 மாத இறக்குமதி என்ற அடிப்படை மட்டத்தினை விஞ்சிக் காணப்பட்டது.

**வரைபடம் 13: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்

**செலாவணி வீதமானது 2023 திசெம்பர் மாத காலப்பகுதியில் தொடர்ந்தும் உறுதியாக காணப்பட்டதோடு 2023 காலப்பகுதியில் 12.1 சதவீத உயர்வொன்றினைப் பதிவுசெய்தது.** அப்போதிலிருந்து உயர்வடைந்து செல்கின்ற போக்கானது தொடர்ந்ததுடன் 2024 சனவரியில் இலங்கை ரூபா ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக 2.1 சதவீதத்தினால் உயர்வடைந்து காணப்பட்டது. அதேவேளை, குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், 2023 காலப்பகுதியில் மற்றும் 2024 சனவரி இறுதிவரையான இவ்வாண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபாவானது யூரோ, ஸ்ரேலிங் பவுன், யப்பானிய யென், இந்திய ரூபா மற்றும் அவுஸ்திரேலிய டொலர் ஆகிய ஏனைய முக்கிய நாணயங்களிற்கெதிராக உயர்வடைந்தது. உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் (REER 24) 2023 திசெம்பர் மாத காலப்பகுதியில் உயர்வடைந்தது. இருப்பினும், உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் (REER 24) 2023இல் ஒட்டுமொத்த தேய்வடைதலொன்றினைப் பதிவுசெய்ததுடன் 100 சுட்டெண் புள்ளிகளின் மட்டத்திற்கு மிகவும் கீழாகத் தொடர்ந்தும் காணப்பட்டமையானது வெளிநாட்டுத்துறைப் போட்டித்தன்மையின் பேணுகையினைக் குறித்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 14: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 15: உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீத (REER 24) அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 1: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு***

| நாணயம் | 2021 | 2022 | 2023 (சன 31 வரை) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | -7.0% | -44.8% | +2.1% |
| யூரோ | +1.1% | -41.4% | +4.5% |
| ஸ்ரேலிங் பவுன் | -6.0% | -38.1% | +2.6% |
| யப்பானிய யென் | +3.8% | -36.4% | +6.6% |
| அவுஸ்திரேலிய டொலர் | -1.2% | -40.8% | +6.4% |
| இந்திய ரூபா | -5.5% | -38.6% | +2.0% |

*தேய்வு(-)/உயர்வு(+)

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

2024 சனவரிற்கான வெளிநாட்டுத்துறைப் பத்திரிகை வெளியீடு 2024 பெப்புருவரி 29 அன்று வெளியிடப்படும்.

**இணைப்பு I:**

## வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் சுருக்கம் (அ)

| வகை | திசெ 2022 (ஐ.அ.டொ. மில்) | திசெ 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-திசெ 2022 (ஐ.அ.டொ. மில்) | சன-திசெ 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 1,068 | 1,002 | -6.2 | 13,106 | 11,911 | -9.1 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 1,426 | 1,489 | 4.4 | 18,291 | 16,811 | -8.1 |
| வர்த்தக மீதி | -358 | -487 | | -5,185 | -4,900 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 127 (ஆ) | 269 (இ) | 111.4 | 1,136 (ஆ) | 2,068 (இ) | 82.0 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 476 | 570 | 19.8 | 3,789 | 5,970 | 57.5 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல்கள் (தேறிய) (ஈ) | 37 | -2 | | 182 | 18 | |
| அரச பிணையங்கள் சந்தையிற்கான மொத்த உட்பாய்ச்சல்கள் | 7 | 39 | | 69 | 824 | |
| திரண்ட நிலுவை | | | | -2,806 | 2,826 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் 2022இல் திருத்தப்பட்டது
(இ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் 2023இல் திருத்தப்பட்டது
(ஈ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றது

**இலங்கை மத்திய வங்கி, வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள் > பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.**
https://www.cbsl.gov.lk/ta/node/6181

**இணைப்பு II:**

**இலங்கை மத்திய வங்கியினால் வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)**

| வகை | திசெ 2022 (ஐ.அ.டொ. மில்) | திசெ 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | 2022 (ஐ.அ.டொ. மில்) | 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **840.9** | **790.9** | **-5.9** | **10,465.3** | **9,277.7** | **-11.3** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 36.7 | 44.3 | 20.6 | 519.5 | 539.3 | 3.8 |
| விலங்குத்தீன் | 19.0 | 9.5 | -50.0 | 170.5 | 145.6 | -14.6 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 481.5 | 439.9 | -8.6 | 5,952.0 | 4,878.9 | -18.0 |
| இதில் ஆடைகள் | 442.6 | 407.7 | -7.9 | 5,483.1 | 4,440.6 | -19.0 |
| புடவைகள் | 29.8 | 23.8 | -20.1 | 353.7 | 338.1 | -4.4 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 9.1 | 8.4 | -7.9 | 115.2 | 100.2 | -13.1 |
| இறப்பர் உற்பத்திகள் | 71.2 | 78.1 | 9.7 | 977.0 | 902.2 | -7.7 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 35.3 | 24.5 | -30.6 | 450.6 | 500.0 | 11.0 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 50.5 | 43.1 | -14.8 | 580.9 | 598.2 | 3.0 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 6.5 | 5.7 | -11.7 | 129.3 | 149.3 | 15.4 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 49.4 | 61.1 | 23.6 | 568.0 | 539.4 | -5.0 |
| இரசாயன உற்பத்திகள் | 16.1 | 16.7 | 3.6 | 223.5 | 193.5 | -13.4 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 9.9 | 10.2 | 3.5 | 136.9 | 114.0 | -16.7 |
| அச்சிடல் கைத்தொழில் பொருட்கள் | 9.8 | 3.4 | -65.0 | 53.1 | 55.1 | 3.9 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 7.4 | 4.8 | -35.0 | 85.8 | 71.2 | -17.0 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 3.9 | 4.6 | 19.3 | 60.9 | 56.3 | -7.6 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 12.6 | 14.6 | 15.7 | 176.7 | 178.3 | 0.9 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 2.7 | 3.0 | 10.6 | 38.1 | 34.0 | -10.7 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 28.2 | 27.2 | -3.3 | 342.4 | 322.5 | -5.8 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **203.4** | **206.6** | **1.6** | **2,568.0** | **2,566.5** | **-0.1** |
| தேயிலை | 107.3 | 111.1 | 3.6 | 1,258.8 | 1,309.9 | 4.1 |
| இறப்பர் | 3.2 | 1.5 | -53.9 | 41.4 | 28.0 | -32.2 |
| தேங்காய் | 24.8 | 23.2 | -6.6 | 400.3 | 336.8 | -15.9 |
| வாசனைத்திரவியங்கள் | 31.3 | 31.3 | -0.2 | 368.7 | 392.9 | 6.5 |
| காய்கறிகள் | 2.2 | 2.4 | 12.0 | 26.7 | 27.7 | 3.8 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.4 | 4.0 | 67.3 | 24.4 | 28.1 | 15.3 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 10.9 | 9.4 | -14.2 | 178.8 | 180.9 | 1.2 |
| கடலுணவு | 21.3 | 23.8 | 11.6 | 269.0 | 262.2 | -2.5 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **20.9** | **2.0** | **-90.6** | **50.0** | **38.5** | **-23.1** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **2.4** | **2.3** | **-3.2** | **23.2** | **28.0** | **20.8** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,067.6** | **1,001.8** | **-6.2** | **13,106.4** | **11,910.7** | **-9.1** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

**இணைப்பு III:**

**நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)**

| வகை | திசெ 2022 (ஐ.அ.டொ. மில்) | திசெ 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | 2022 (ஐ.அ.டொ. மில்) | 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **224.0** | **224.8** | **0.3** | **2,701.8** | **2,761.0** | **2.2** |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 24.0 | 26.9 | 12.2 | 301.2 | 301.7 | 0.2 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 6.5 | 6.0 | -8.5 | 77.5 | 77.6 | 0.2 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 30.2 | 33.6 | 11.3 | 449.0 | 430.6 | -4.1 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 139.1 | 143.6 | 3.3 | 1,611.1 | 1,701.3 | 5.6 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **11.1** | **15.4** | **39.1** | **135.8** | **158.5** | **16.7** |
| 11 குடிபானங்கள் | 2.7 | 4.9 | 81.1 | 46.7 | 64.3 | 37.7 |
| 12 புகையிலை மற்றும் புகையிலைத் தயாரிப்புக்கள் | 8.4 | 10.5 | 25.5 | 89.2 | 94.2 | 5.7 |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **46.8** | **22.2** | **-52.6** | **450.3** | **380.5** | **-15.5** |
| 23 மசகு இறப்பர் | 3.3 | 1.7 | -49.3 | 42.4 | 29.5 | -30.6 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 13.4 | 10.3 | -23.0 | 228.6 | 210.7 | -7.9 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **49.4** | **61.1** | **23.6** | **568.0** | **539.4** | **-5.0** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 41.3 | 61.1 | 47.8 | 544.1 | 539.4 | -0.9 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 8.1 | - | - | 23.9 | - | - |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **4.8** | **5.4** | **12.9** | **89.9** | **69.6** | **-22.6** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 4.8 | 5.3 | 9.6 | 75.4 | 67.5 | -10.5 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **18.4** | **19.0** | **3.1** | **271.5** | **234.2** | **-13.7** |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **144.5** | **138.6** | **-4.1** | **1,875.9** | **1,875.8** | **-0.01** |
| 62 இறப்பர் தயாரிப்புக்கள் வே.எ.கு | 49.7 | 57.9 | 16.5 | 680.3 | 675.1 | -0.8 |
| 65 புடவை நூழிழை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 36.7 | 31.3 | -14.8 | 447.1 | 398.9 | -10.8 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 40.1 | 28.9 | -27.7 | 510.4 | 559.2 | 9.6 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **55.5** | **47.8** | **-14.0** | **692.1** | **730.9** | **5.6** |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 30.9 | 23.6 | -23.6 | 364.2 | 352.8 | -3.1 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **513.0** | **467.5** | **-8.9** | **6,320.3** | **5,160.4** | **-18.4** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 469.4 | 431.9 | -8.0 | 5,832.0 | 4,713.8 | -19.2 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **-** | **0.1** | **-** | **0.8** | **0.4** | **-45.8** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,067.6** | **1,001.8** | **-6.2** | **13,106.4** | **11,910.7** | **-9.1** |

(அ) தற்காலிகமானது
வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும்.
https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf

**இணைப்பு IV:**

**இலங்கை மத்திய வங்கியினால் வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)**

| வகை | திசெ 2022 (ஐ.அ.டொ. மில்) | திசெ 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | 2022 (ஐ.அ.டொ. மில்) | 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **241.5** | **272.8** | **12.9** | **2,813.0** | **3,043.9** | **8.2** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 129.9 | 152.0 | 17.0 | 1,607.9 | 1,693.0 | 5.3 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 26.5 | 8.2 | -68.9 | 430.5 | 116.9 | -72.8 |
| பால் உற்பத்திகள் | 20.5 | 16.9 | -17.7 | 225.3 | 273.7 | 21.5 |
| காய்கறிகள் (ஆ) | 21.3 | 32.1 | 50.8 | 318.4 | 358.6 | 12.6 |
| கடலுணவு | 3.6 | 8.0 | 125.1 | 66.4 | 79.4 | 19.6 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 34.3 | 45.2 | 31.7 | 257.8 | 435.5 | 68.9 |
| வாசனைத்திரவியங்கள் | 12.1 | 11.8 | -2.8 | 136.6 | 133.4 | -2.4 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 11.7 | 29.9 | 155.9 | 172.8 | 295.5 | 71.0 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 111.6 | 120.8 | 8.2 | 1,205.1 | 1,350.9 | 12.1 |
| தனியாள் ஊர்திகள் | 3.5 | 3.1 | -10.3 | 11.7 | 27.7 | 136.9 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 57.8 | 46.7 | -19.3 | 533.4 | 667.0 | 25.0 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 3.9 | 9.2 | 135.5 | 85.5 | 72.4 | -15.4 |
| புடவை மற்றும் துணைப்பொருட்கள் | 14.8 | 15.0 | 1.7 | 215.6 | 170.0 | -21.1 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 5.3 | 12.1 | 128.5 | 69.0 | 98.8 | 43.3 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 10.8 | 15.5 | 43.4 | 116.3 | 122.1 | 5.0 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 15.4 | 19.1 | 23.5 | 173.7 | 192.9 | 11.1 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **983.8** | **948.3** | **-3.6** | **12,438.8** | **11,006.6** | **-11.5** |
| எரிபொருள் | 383.5 | 414.2 | 8.0 | 4,896.8 | 4,702.6 | -4.0 |
| இதில் மசகெண்ணெய் | 67.9 | 142.3 | 109.6 | 483.8 | 1,137.5 | 135.1 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 300.5 | 232.6 | -22.6 | 4,048.2 | 3,095.4 | -23.5 |
| நிலக்கரி | 15.1 | 39.2 | 159.3 | 364.8 | 469.8 | 28.8 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 16.6 | 30.7 | 84.3 | 203.8 | 268.4 | 31.7 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 200.9 | 183.2 | -8.8 | 3,065.2 | 2,371.2 | -22.6 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 33.9 | 35.1 | 3.8 | 465.9 | 412.4 | -11.5 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 18.6 | 18.9 | 1.6 | 214.5 | 233.8 | 9.0 |
| கோதுமை மற்றும் சோளம் | 35.8 | 19.9 | -44.3 | 303.1 | 338.2 | 11.6 |
| அடிப்படை உலோகங்கள் | 13.5 | 21.8 | 61.2 | 323.2 | 313.8 | -2.9 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 41.8 | 41.5 | -0.7 | 650.8 | 474.6 | -27.1 |
| இரசாயன உற்பத்திகள் | 65.1 | 72.1 | 10.8 | 966.2 | 814.7 | -15.7 |
| வளமாக்கி | 115.8 | 34.5 | -70.2 | 275.9 | 235.0 | -14.8 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 12.1 | 23.2 | 91.2 | 334.7 | 200.2 | -40.2 |
| கனிம உற்பத்திகள் | 4.9 | 5.9 | 20.6 | 123.7 | 80.9 | -34.6 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 41.3 | 47.4 | 14.6 | 615.0 | 560.7 | -8.8 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **200.0** | **267.1** | **33.6** | **3,030.5** | **2,744.6** | **-9.4** |
| பொறி மற்றும் கருவிகள் | 130.0 | 174.9 | 34.6 | 1,969.0 | 1,867.6 | -5.1 |
| கட்டடப் பொருட்கள் | 62.4 | 69.6 | 11.6 | 926.3 | 775.1 | -16.3 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 7.6 | 22.2 | 193.5 | 132.1 | 98.5 | -25.4 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.1 | 0.4 | 412.1 | 3.0 | 3.3 | 9.2 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.3** | **0.3** | **37.9** | **8.8** | **16.0** | **82.9** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,425.6** | **1,488.6** | **4.4** | **18,291.0** | **16,811.1** | **-8.1** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **1,042.0** | **1,074.4** | **3.1** | **13,394.2** | **12,108.5** | **-9.6** |

(அ) தற்காலிகமானவை
(ஆ) பருப்பு வகை, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகை மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

**இணைப்பு V:**

**நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிச் செலவினம் (அ)**

| வகை | திசெ 2022 (ஐ.அ.டொ. மில்) | திசெ 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | 2022 (ஐ.அ.டொ. மில்) | 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **188.5** | **179.5** | **-4.8** | **2,162.2** | **2,186.1** | **1.1** |
| 02 பாற்பண்ணை உற்பத்திகள் மற்றும் பறவைகளின் முட்டைகள் | 20.6 | 18.7 | -9.0 | 225.7 | 289.6 | 28.3 |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 3.7 | 8.1 | 120.3 | 67.7 | 80.5 | 18.9 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 61.9 | 27.8 | -55.0 | 729.0 | 452.7 | -37.9 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 25.3 | 37.3 | 47.7 | 365.4 | 402.4 | 10.1 |
| 06 சீனி, சீனித் தயாரிப்புகள் மற்றும் தேன் | 34.3 | 45.2 | 31.7 | 257.8 | 435.6 | 68.9 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 16.1 | 15.7 | -2.6 | 180.0 | 180.8 | 0.5 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **7.8** | **11.3** | **44.8** | **101.0** | **122.0** | **20.8** |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **23.1** | **30.0** | **30.2** | **465.3** | **328.8** | **-29.3** |
| 23 மசகு இறப்பர் | 8.7 | 20.0 | 128.9 | 283.6 | 157.3 | -44.5 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 1.7 | 0.4 | -76.2 | 30.5 | 33.5 | 9.7 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **383.5** | **414.2** | **8.0** | **4,896.8** | **4,702.6** | **-4.0** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 338.8 | 345.2 | 1.9 | 4,288.0 | 3,948.0 | -7.9 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 29.6 | 29.7 | 0.4 | 243.9 | 284.9 | 16.8 |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **2.4** | **18.1** | **659.7** | **79.8** | **162.9** | **104.2** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 1.7 | 17.3 | 924.8 | 65.6 | 151.1 | 130.3 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **279.1** | **191.9** | **-31.2** | **2,392.2** | **2,150.5** | **-10.1** |
| 54 மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் | 54.5 | 44.0 | -19.4 | 502.3 | 618.4 | 23.1 |
| 56 வளமாக்கி மற்றும் தயாரிக்கப்பட்டவை | 115.8 | 34.5 | -70.2 | 275.8 | 234.8 | -14.8 |
| 57 ஆரம்ப வடிவத்தில் பிளாத்திக்குகள் | 26.0 | 28.2 | 8.7 | 438.6 | 308.6 | -29.6 |
| 58 ஆரம்ப வடிவத்தில் அல்லாத பிளாத்திக்குகள் | 15.0 | 10.0 | -33.5 | 174.7 | 131.9 | -24.5 |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **330.9** | **358.1** | **8.2** | **5,114.1** | **4,267.8** | **-16.5** |
| 64 தாள், தாள் அட்டைகள் மற்றும் அவற்றின் பொருட்கள் | 32.2 | 34.5 | 7.0 | 436.7 | 399.1 | -8.6 |
| 65 புடவை நூழிலை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 194.8 | 179.6 | -7.8 | 2,991.0 | 2,300.6 | -23.1 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 34.0 | 50.5 | 48.4 | 485.0 | 488.9 | 0.8 |
| 67 இரும்பு மற்றும் உருக்கு | 18.9 | 28.3 | 50.1 | 456.3 | 428.4 | -6.1 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **146.2** | **217.3** | **48.6** | **2,278.1** | **2,137.9** | **-6.2** |
| 72 குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கான சிறப்பியல்புவாய்ந்த பொறி | 22.7 | 29.2 | 28.9 | 396.5 | 264.1 | -33.4 |
| 74 பொதுவான கைத்தொழில்களுக்கான பொறி மற்றும் கருவிகள் வே.எ.கு பொறி உதிரிப்பாகங்கள் | 28.1 | 35.8 | 27.6 | 430.9 | 359.4 | -16.6 |
| 75 அலுவலக எந்திரங்கள் மற்றும் தன்னியக்க தரவு செயன்முறைப்படுத்தல் எந்திரங்கள் | 10.9 | 14.3 | 31.5 | 161.7 | 146.2 | -9.6 |
| 76 தொலைத்தொடர்பூட்டல் மற்றும் ஒலிப் பதிவுகள் மற்றும் மீள் தயாரிப்பு பொறிகள் மற்றும் கருவிகள் | 16.2 | 27.3 | 68.9 | 231.6 | 266.7 | 15.1 |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 40.4 | 38.1 | -5.7 | 633.1 | 541.8 | -14.4 |
| 78 வீதி ஊர்திகள் | 12.3 | 12.9 | 5.2 | 158.2 | 140.4 | -11.2 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **63.8** | **67.7** | **6.1** | **791.3** | **738.6** | **-6.7** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 13.3 | 12.6 | -4.8 | 191.5 | 146.3 | -23.6 |
| 87 தொழில்சார், விஞ்ஞான மற்றும் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் மற்றும் வே.எ.கு கருவிகள் | 12.5 | 15.1 | 20.6 | 143.2 | 159.2 | 11.1 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **0.2** | **0.4** | **112.1** | **10.3** | **13.8** | **34.6** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,425.6** | **1,488.6** | **4.4** | **18,291.0** | **16,811.1** | **-8.1** |

(அ) தற்காலிகமானது

வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும். https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf